**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**E.A**.75/11 **E.P**.91/1997 **in O.S.No**.193/96

2018 **ஆண்டு ஆகஸ்ட் மாதம்** 11 **ம் நாள்**

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி **திருமதி.எஸ்.மோகனரம்யா பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் லட்சுமி வயது

த.பெ/க.பெ மதம்

முகவரி தொழில்

நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 14 ம் சாட்சி (**PW**14) (11.08.2018)

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இடம் பிரச்சனை சம்மந்தமாக நான் மனு தாக்கல் செய்துள்ளேன். தனலட்சுமிக்கு எதிராக மனு தாக்கல் செய்துள்ளேன். மனு சொத்து எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்று எனக்கு தெரியாது. அதன் விஸ்தீரணம் 4 1/2 ஏக்கர் ஆகும். மனு சொத்து யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் முனியனுக்கு பாத்தியப்பட்டதாகும். முனியனை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நான் குடிசை போட்ட போது மனு சொத்தை யார் அனுபவம் செய்தார்கள் என்றால் முருகேச கவுண்டர் அழைத்தன் பேரில் நான் மனு சொத்தில் குடிசை போட்டேன். நான் குடிசை போட்ட போது மனு சொத்தில் என்னுடன் 30 நபர்களும் குடிசை போட்டார்கள். மனு சொத்தில் முதன் முறையாக நானும், முருகேச கவுண்டரும் குடிசை போட்டோம். மற்றவர்கள் 3 மாத காலத்திற்குள் குடிசை போட்டார்கள். சுமார் 170 குடிசைகள் போடப்பட்டன. தற்போது அனைத்து குடிசைகளும் மாடி வீடுகளாக உள்ளன. நான் குடிசை போட்டு ஓர் ஆண்டு காலம் கழித்து பட்டா வழங்கப்பட்டது. மனு சொத்தில் நான் குடிசை போட்டு 30 ஆண்டுகள் இருக்கும். எனது சொந்த ஊர்

செட்டிபாளையம் ஆகும். மனு சொத்திற்கு கிழபுரமும், மேற்குபுரமும் மனைகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மனு கொடுத்து ஓர் ஆண்டு காலம் கழித்து பட்டா கொடுக்கப்பட்டது. முருகேச கவுண்டர் இந்நீதிமன்றத்தில் எனக்கு எதிராகவும், மற்றவர்களுக்கு எதிராகவும் திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் மனு சொத்தை பொறுத்து 30.4.1990 ல் அசல் வழக்கு எண் 172/1990 தாக்கல் செய்து பின்னிட்டு மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு எண் 193/96 ஆக கோப்பில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 193/96 ல் நான் 116 பிரதிவாதி என்றும் எனக்கு வழக்கு அழைப்பாணை அனுபப்பட்டது என்றால் சரிதான். நான் எனது தரப்பில் வழக்கறிஞரை நியமித்து வழக்காடினேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 193/96 ல் மனு சொத்து முருகேச கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றும் தாவா சொத்தினை பிரதிவாதிகள் காலி செய்து முருகேச கவுண்டருக்கு சுவாதீனம் கொடுக்கப்பட வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் மேல் முறையீட்டு வழக்கு எண் 34/2002 ல் 69 மேல் முறையீட்டாளர் என்றால் சரிதான். மேல் முறையீட்டு வழக்கு எண் 34/2002 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். மனு சொத்தை சுவாதீனம் எடுப்பதற்கு நீதிமன்ற அமீனா 2 வருட காலத்திற்கு முன்பு மனு சொத்திற்கு வந்தார் என்றால் எனக்கு தெரியாது, நீதிமன்ற அமீனா வந்தததாக என்னிடம் தெரிவித்தார்கள். பாப்பம்மாள், கிருஷ்ணசாமி ஆகியோரை எனக்கு தெரியும். பாப்பம்மாள், கிருஷ்ணசாமி மற்றும் வகையறா இம்மனுவில் தங்களுக்கு எதிராக பிறபிக்க்பபட்ட ஒரு தலை பட்ச உத்தரவினை ரத்து செய்யுமாறு E.A.14/2017 தாக்கல் செய்து மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி உத்தரவின் மீது சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் எனக்கு தெரியாது. முருகேச கவுண்டர் 4

வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். முருகேச கவுண்டர் இறப்பதற்கு மனு சொத்தில் அனுபவத்தில் இருந்தார் என்றால் சரிதான். முருகேச கவுண்டர் மனு சொத்தைப் பொறுத்து யார் மீது ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தனலட்சுமி யார் என்று எனக்கு தெரியாது. தனலட்சுமி மற்றும் தங்கசாமி பெயரில் முருகேச கவுண்டர் மனு சொத்தைப் பொறுத்து உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எங்களுக்கு 1991 ம் ஆண்டு பட்டா வழங்கப்பட்டதாக சொல்லும் கால கட்டத்தில் முருகேச கவுண்டர் ஒரு வருட காலத்திற்கு முன்பே இவ் அசல் வழக்கினை தாக்கல் செய்துவிட்டார் என்றும், வழக்கு நிலுவையில் பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டா சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டு முருகேச கவுண்டர் தான் மனு சொத்தின் உரிமையாளர் என்றும், அவர் வசம் சுவாதீனம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று அசல் வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் ஏற்கனவே அசல் வழக்கில் தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்றும், மீண்டும் அதே காரணங்களுக்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. எனது தரப்பு வரி ரசீதுகள் இம்மனுவிற்கு பின்னிட்டு ஏற்பட்டவை என்றும் மேற்படி ரசீதுகள் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. இவ் அசல் வழக்கு தீர்ப்பின் படி மனு சொத்தை சுவாதீனம் ஒப்படைப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றும், வீண் கால தாமதம் செய்ய வேண்டி இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**E.A**.75/11 **E.P**.91/1997 **in O.S.No**.193/96

2018 **ஆண்டு ஆகஸ்ட் மாதம்** 11 **ம் நாள்**
சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி **திருமதி.எஸ்.மோகனரம்யா பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் மயிலாள் வயது

த.பெ/க.பெ மதம்

முகவரி தொழில்

நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 15 ம் சாட்சி (**PW**15) (11.08.2018)

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இடத்திற்காக வேண்டி மனு செய்துள்ளேன். ஆரம்ப காலத்தில் மனு சொத்து முனியனுக்கு பாத்தியப்பட்டிருந்தது. முனியன் மனு சொத்தினை முருகேச கவுண்டருக்கு கொடுத்து விட்டு இறந்துவிட்டார். எனது சொந்த ஊர் செட்டிப்பாளையம் ஆகும். மனு சொத்தில் நான் குடிசை போட்ட கால கட்டத்தில் எனக்கு திருமணம் ஆகிவிட்டது. நான் 30 ஆண்டுகளுக்கு முன்பு மனு சொத்தில் குடிசை போட்டேன். சுமார் 170 நபர்கள் 3 மாத காலத்தில் மனு சொத்தில் குடிசை போட்டோம். மனு சொத்தில் குடிசை போட்ட காலகட்டத்தில் முருகேச கவுண்டர் காவல் நிலையத்தில் எங்களுக்கு எதிராக புகார் அளித்தார் என்றால் சரியல்ல. குடிசை போட்டு ஓர் ஆண்டு காலம் கழித்து எங்களுக்கு பட்டா வழங்கப்பட்டது. முருகேச கவுண்டர் இந்நீதிமன்றத்தில் எனக்கு எதிராகவும், மற்றவர்களுக்கு எதிராகவும் திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் மனு சொத்தை பொறுத்து 30.4.1990 ல் அசல் வழக்கு எண் 172/1990 தாக்கல் செய்து பின்னிட்டு மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு எண் 193/96 ஆக கோப்பில் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 193/96 ல் நான் 145 பிரதிவாதி என்றும் எனக்கு வழக்கு அழைப்பாணை அனுபப்பட்டது என்றால் சரிதான். நான் எனது தரப்பில் வழக்கறிஞரை நியமித்து வழக்காடினேன்

என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 193/96 ல் மனு சொத்து முருகேச கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றும் தாவா சொத்தினை பிரதிவாதிகள் காலி செய்து முருகேச கவுண்டருக்கு சுவாதீனம் கொடுக்கப்பட வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் மேல் முறையீட்டு வழக்கு எண் 34/2002 ல் 84 மேல் முறையீட்டாளர் என்றால் சரிதான். மேல் முறையீட்டு வழக்கு எண் 34/2002 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். மனு சொத்தினை சுவாதீனம் எடுப்பதற்காக நீதிமன்ற அமீனா மனு சொத்திற்கு வந்தார் என்றால் எனக்கு தெரியாது. குமரன், பழனியம்மாள், பாப்பாத்தி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோரை எனக்கு தெரியாது. மேற்படியாளர்கள் இந்நீதிமன்றத்தில் E.A.14/2017 மனு தாக்கல் செய்து மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அம்மனு உத்தரவின் மீது சென்னை உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். முருகேச கவுண்டர் 4 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். முருகேச கவுண்டர் இறப்பதற்கு மனு சொத்தில் அனுபவத்தில் இருந்தார் என்றால் சரிதான். முருகேச கவுண்டர் மனு சொத்தைப் பொறுத்து யார் மீது ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தனலட்சுமி மற்றும் தங்கசாமி எனக்கு தெரியும்.. தனலட்சுமி மற்றும் தங்கசாமி பெயரில் முருகேச கவுண்டர் மனு சொத்தைப் பொறுத்து உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எங்களுக்கு 1991 ம் ஆண்டு பட்டா வழங்கப்பட்டதாக சொல்லும் கால கட்டத்தில் முருகேச கவுண்டர் ஒரு வருட காலத்திற்கு முன்பே இவ் அசல் வழக்கினை தாக்கல் செய்துவிட்டார் என்றும், வழக்கு நிலுவையில் பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டா சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டு முருகேச கவுண்டர் தான் மனு சொத்தின் உரிமையாளர் என்றும், அவர் வசம் சுவாதீனம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று அசல்

வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் ஏற்கனவே அசல் வழக்கில் தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்றும், மீண்டும் அதே காரணங்களுக்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. எனது தரப்பு வரி ரசீதுகள் இம்மனுவிற்கு பின்னிட்டு ஏற்பட்டவை என்றும் மேற்படி ரசீதுகள் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. இவ் அசல் வழக்கு தீர்ப்பின் படி மனு சொத்தை சுவாதீனம் ஒப்படைப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றும், வீண் கால தாமதம் செய்ய வேண்டி இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.